செ.வெ.எண்-23 நாள்-13.02.2018

# அரியலூர் மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்பு உதவியாளர் பணிக்கு தகுதியுள்ளோர் 14.02.2018 முதல் 26.02.2018-க்குள் விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு தகுதியும் விருப்பமுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**நிறுவனம்** - தமிழ்நாடுஅரசு கால்நடை பராமரிப்புத்துறை.

**பணியிடம்** - அரியலூர்.

**பதவியின் பெயர்** - கால்நடை பராமரிப்பு உதவியாளர்.

**காலியிடங்கள்** - 19 கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவி காலியிடங்கள்.

**தகுதி** - குறைந்த பட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும். (appeared X standard) கால்நடைகளை கையாளத் தெரிந்திருக்க வேண்டும். சைக்கிள் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.

**வயது வரம்பு** - 01.07.2015அன்று குறைந்த பட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட (முஸ்லீம்) 32 ஆகும். பொதுப் பிரிவினருக்கு 30 ஆகும். (01.07.2015 அன்று உள்ளபடி).

**ஊதிய விகிதம்** - **Schedule III. Pay Matrix - Level 2 Basic Pay Rs. 15900-**

**தேர்வு செய்யும் முறை** - நேர்முகத் தேர்வில் அதிக மதிப்பெண் (Merit) பெறும் விண்ணப்பதாரர்களின் சான்றுகள் சரிபார்க்கப்பட்டு இனச்சுழற்சியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 14.02.2018 முதல் 26.02.2018 வரை பெறப்படும். 26.02.2018 க்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மனுவில் அனைத்து விவரங்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முழுமையான விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பம் ஏற்கப்பட்ட மனுதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு மாவட்ட அளவில் நடைபெறும்.

**விண்ணப்பிக்கும் முறை** - தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் www.ariyalur.tn.nic.in என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு 14.02.2018 முதல் 26.02.2018 தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையினை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்ப வேண்டும்.

**பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டிய முகவரி**

மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, எண்.211, இரண்டாவது தளம், மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் - 621 704.

**விண்ணப்பம் சென்று சேரவேண்டிய கடைசி தேதி 26.02.2018.**

தேர்வு தொடர்பான எதையும் அல்லது எல்லாவற்றையும் மாற்றியமைப்பதற்கோ அல்லது தேர்வினை இரத்து செய்வதற்கோ அரியலூர் மண்டல இணை இயக்குநர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.